மாகாணக் கல்வி திணைக்களம் - சபரகமுவ

வாராந்த பாடசாலை

பாடம் - வரலாறு

வாரம் -: இரண்டாம் வாரம்

தரம் - 10

S. இரஜினிகாந்தி - கே/தெஹி/புனிதமரியாள் த.ம.வி எட்டியாந்தோட்டை

# இலங்கையின் புராதன விஞ்ஞான தொழில்நுட்பம்.

**01). பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

**01. அமுக்கப் பிரயோகம் எனும் தொழில்நுட்பம் எத்துறையில் பயன்படுத்தப்பட்டது?**

1. களிமண் குடம் தயாரித்தல்.
2. நீர் முகாமைத்துவம்.
3. கல்லாயுதம் தயாரித்தல்.
4. கட்டட நிர்மாணம்.

**02. வஜ்ர சும்பட்ட பற்றிய பொருத்தமான கூற்று.**

1. ருவன்வெலிசாய வை பூமி அதிர்ச்சியில் இருந்து பாதுகாத்தல்.
2. ருவன்வெலிசாயவை மண்சரிவில் இருந்து பாதுகாத்தல்.
3. ருவன்வெலிசாய கடும் வெயிலில் இருந்து பாதுகாத்தல்.
4. ருவன்வெலிசாய வை இடி மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாத்தல்.

**03. புராதன இலங்கையில் வைத்திய, சுகாதார சேவைகளின் உச்ச நிலையை காட்டும் அகழ்வாராய்ச்சி.**

1. பொலன்னறுவை ஆலாஹனா பிரிவெனா அகழ்வு.
2. சமநல வெவ நீர்த்தேக்க பிரிவெனா அகழ்வு.
3. கூரகல பிரதேச பிரிவெனா அகழ்வு.
4. அனுராதபுர ஜேதவனாராம பிரிவெனா அகழ்வு.

**04. புராதன கல்வெட்டுக்களில் "அடிக" எனும் பதவியை உடையவர் மேற்கொண்ட பணி யாது?**

1. குளப்பரிபாலனம்.
2. குளநிர்மாணம்.
3. கால்வாய் நிர்மாணம்.
4. நீர்ப்பாசன பரிபாலனம்.

ST.MARY'S T.M.V

**05. “திஸ்ஸ” எனும் விகாரைக்கு 08 கரீசை அளவு நிலத்தை தானம் செய்ததாக ஹொரிவலை கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட மன்னன் யார்?**

1. பாதிகாபயன்.
2. பண்டுகாபயன்.
3. துட்டகைமுனு.
4. குட்டகண்ண அபயன்.

**06. குஞ்ஞா,மாசக்க,தரண போன்ற அளவீட்டு முறை எதற்காக பயன்படுத்தப்பட்டது?**

1. நில அளவீடு.
3. நிறை அளவீடு.
2. பண அளவீடு.
4. கால அளவீடு.

**07. அணைக்கட்டு அரிப்புறுவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குளத்தின் பகுதி எது?**

1. மடைக்கதவு.
2. குளக்கட்டு.
3. அலைதாங்கி.
4. கலிங்கல்தொட்டி.

**08. மடைக்கதவுகளை "மொஹால் நகா" போன்ற பதங்களால் குறிப்பிடுகின்ற கல்வெட்டு.**

1. வெஸ்ஸகிரிய கல்வெட்டு.
2. கல்பொத்த கல்வெட்டு.
3. மிகிந்தலை சுவர் கல்வெட்டு.
4. பதுளை தூண் கல்வெட்டு.

**09. கி.பி 5ம் நூற்றாண்டில் கட்டியெழுப்பப்பட்ட சிறந்த நிர்மாணம்.**

1. சீகிரிய.
2. லோவமகாபாய.
3. அபயகிரி.
4. ஜேதவனாராம.

**10. வஜ்ரசும்பட்ட என்னும் பெயரிலான இடிதாங்கி பொருத்தப்பட்டுள்ள விகாரை**

1. ஜேதவனாராம.
2. ருவன்வெலிசாய.
3. தூபாராம.
4. அபயகிரி.

**11. பண்டைய கல்வெட்டுக்களில் மடைக்கதவுக்கு வழங்கப்பட்ட பெயர்**.

1. அவரண.
2. ரஜமொஹால்.
3. தண்ணீர் விளக்கு.
4. அடிக.

ST.MARY'S T.M.V

**12. இடிமின்னலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக ருவன்வெலிசாய தாதுகோபத்தில் பொருத்தப்பட்ட உபகரணத்திற்கு வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர் யாது?**

1. வஜ்ரசும்பட்ட.
2. ரன்சிரியல்.
3. நவநீதம்.
4. மாசக்க.

**13. நீளத்தை அளப்பதற்கு புராதன காலத்தில் பயன்படுத்திய மிகச்சிறிய அலகு**

1. அங்குலம். 2. வியத்த. 3. பரமாணு. 4. யொதுன.

**14. பாரிய கொள்ளளவுடனான பரந்து விரிந்திருக்கும் குளத்திலிருந்து பாதிப்பு ஏற்படாத வகையில் நீர்ப்பாசனத்திற்கு நீரை விநியோகிப்பதற்கு பயன்படுத்திய உறுப்பு.**

1. சுருங்கை.
2. கலிங்கல் தொட்டி.
3. அலை தாங்கி.
4. கலிங்கல்.

**15. அசையா நீர் விஞ்ஞான முறை எனப்படும் அறிவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.**

1. சுருங்கை.
2. குளக்கட்டு.
3. அலை தாங்கி.
4. தெடிகம யானை விளக்கு.

**16. சமன லவெவ பிரதேசத்தில் இருந்த இரும்பை பெற்றுக்கொள்வதற்கான அடுப்பினை ஏரிப்பதற்கான கரி பெற்றுக்கொள்வதற்காக எரிக்கப்பட்ட மரம்.**

1. மருது.
2. மலங்.
3. மரங்.
4. மாவு.

**17. பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மிக சிறிய அலகு அல்லாதது.**

1. குஞ்சா.
2. பரமானு.
3. வியத்த.
4. கவ்வ.

ST.MARY'S T.M.V

**18. பிரதான வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு கற்றூண்களை நடுமாறு கட்டளையிட்ட மன்னன்.**

**1.** வசபன். 2. மகா பராக்கிரம பாகு.
3. நிஸ்ஸங்கமல்லன். 4. முதலாம் விஜயபாகு.

**19. அணைக்கட்டுகளுக்கு கல்வெட்டுக்களில் வழங்கப்படும் பெயர் யாது?**

1. நியகம. 2. அவரண.
3. வாவிகாம. 4. ஓலகம.

**20. பசுக்களின் பாதுகாப்பிற்காக சாந்தி பூஜைகள் இன்றும் நடைபெறும் மாகாணங்கள்.**

1. சபரகமுவ, ஊவா மாகாணங்கள்.
2. வட வடக்கு கிழக்கு மாகாணங்கள்.
3. கிழக்கு, ஊவா மாகாணங்கள்.
4. மேல், ஊவா மாகாணங்கள்.


## பகுதி 1.

**1. பின்வரும் இடங்களை இலங்கை புற உரு படத்திலும், உலக புற உரு படத்தில் குறித்து காட்டுக.**

**1. (**அருவி ஆறு,தெதுறு ஓயா,கல்லோயா நீர்த்தேக்கம்,உடரஞ்சாமடம,கந்துருகொட, சொரபொரவாவி,யோதவாவி,தேவநகரம்,உருவெல,ஊராத்தோட்டை,மாத்தளை, அலுவிகாரை,கதிர்காமம்**)**

2. **(**செங்கடல், கள்ளிக்கோட்டை, பிரித்தானியா, மலாக்கா நீரிணை, ஜாவா தீவு, பாரசீக வளைகுடா**)**

ST.MARY'S T.M.V


N




ST.MA